1993 மார்ச் 23]

stances, the area cannot be developed in any way unless the Union is bifurcated and a seperate Tribal Union is created. Already, the District Development Council, Dharmapuri has passed a resolution in this regard and sent it for approval to the Government. I request the Hon. Minister to take this into consideration at least in the next financial year and bifurcate this Union into two and establish a seperate Panchayat Union as a Tribal Union exclusively. The expenses can be met by the Central Government. So, I would like to know whether the Ho . Minister would recommend the formation of a seperate Tribal Union so that the entire expenses of that Union could be met by the Central Government.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் சீரமைக்கும் பணி நடைபெறுவதால் உள்ளாட்சி நிறுவனங்களில் 1—8—1992 முதல் எவ்வித நிர்வாக மாறுதலும் செய்யக்கூடாது என்று அரசின் தடையாணை இருந்தது. தற்போது இந்தத் தடையாணை 18—3—1993இல் விலக்கிக் கொள்ளப்பட்டது. அரசுக்கு ஏற்படுகிற கூடுதல் செலவினங்கள் பரிசீலிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் பேரில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, எண் 153, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

153—

அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் குரங்குகள் தொல்லைகளைப் போக்குதல்.

*13319— திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் குரங்குகளின் தொல்லையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1993 மார்ச் 23

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பாசமுத்திரம் பேரூராட்சி மன்ற பகுதியில் இருந்த குரங்குகள் சுகாதாரப் பணியாளர்களால் விரட்டப்பட்டு விட்டன.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குரங்குகள் விரட்டப்பட்டது உண்மைதான். ஆனால் திரும்பவும் வந்துவிட்டன என்பது தான் இப்பொழுது அங்கே நடைபெறுகிற உண்மை. இந்தக் குரங்குகளின் தொல்லைகளைப் பற்றி நான் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொன்னேன். அதன் பேராலே அவர் உள்ளாட்சித் துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து அந்தக் குரங்குகளை அப்புறப்படுத்தச் சொன்னார். ஆனால், இந்தக் குரங்குகள் அனைத்தையும் இரண்டு அணிகளாகப் பிரித்து ஒரு பகுதியை இராதாபுரம், பகுதியிலேயும் இன்னொரு பகுதியை குற்றாலத்திலேயும் கொண்டு போய் விட்டோம். ஆனால் அம்பாசமுத்திரம் பகுதியிலே என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. திரும்பவும் அந்தக் குரங்குகள் அதே இடத்திற்கு வந்து விட்டன. (சிரிப்பு) அந்தக் குரங்குகள் வருகிற நேரம் என்ன பண்ணுகின்றன என்றால் அங்கே இருக்கிற டி. வி. ஆன்டனாவை உடைக்கிறது, வீட்டிலே போட்டிருக்கிற சாமான்களை தூக்கிக் கொண்டு ஓடி விடுகிறது. சில பேர் வைத்திருக்கிற வேட்டிக்யைக்கூட மரத்திலே கொண்டு போய் வைத்து விடுகிறது. இந்த மாதிரி கஷ்டமான நிலைமை என் பகுதியிலே நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த குரங்குகளை நீங்கள் எப்படி அப்புறப்படுத்தப்போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. பக்கத்திலே இருக்கிற வனத் துறை அமைச்சர் அவர்கள் எப்போதுமே உடனுக்குடன் வேகமாக செயல்படுகிறவர்கள். அவர்களிடத்திலே காட்டு இலாகா அதிகாரிகள் இருக்கிறார்களே, அவர்களை அணுகி, அவர்களிடத்திலே சம்மதம் வாங்கி, அந்தக் குரங்குகளை வேறு எங்காவது இடத்திற்கு அனுப்பி, அம்பாசமுத்திரம் பகுதியிலே திரும்பவும் அவைகள் வராமல் இருப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்வார்களா என அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து வனத் துறை அமைச்சருடைய பரிந்துரையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் க. பொன்னுசாமி.

1993 மார்ச் 23]

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குரங்குகள் பிடிவாதத்திற்குப் பெயர் போன விலங்குகள், குரங்கு சேஷ்டை என்றும், குரங்குப்பிடி என்றும் பேசும் அளவுக்கு நடந்து கொள்ளக் கூடியவை. ஓர் இடத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட குரங்குகள் தாமாகவோ அணி சேர்த்துக் கொண்டோ மீண்டும் அந்த இடத்திற்கு வர வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கக்கூடியவை. அவைகள் எப்படியேனும் மீண்டும் பழைய இடத்தைப் பிடிக்க வேண்டுமென்று முயற்சி எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. (சிரிப்பு) இதைத் தடுக்கும் வகையில் ''வாலியை வதம் செய்த இராமனைப் போல தீமைகளை சுட்டெரித்து'' இங்கே நல்லாட்சியை, பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குரங்குகள் மீண்டும் பழைய இடத்துப் பக்கம் தலை வைத்துப் படுக்கவே விடாத அளவுக்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் நிச்சயமாக இது போன்ற குரங்குகள் அந்தப் பகுதிக்கு வரவிடாமல் தடுப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 154, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

154—

பரமக்குடி தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிய பயிற்சிகளைத் துவக்குதல்.

*14719—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொழிற் பயிற்சி நிலையத்தில் தட்டச்சு, வானொலி தொலைக்காட்சி தையல் பயிற்சி ஆகியவை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?